3. சட்ட முன்வடிவு. (அறிமுகம் செய்தல்.)

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது, அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1990 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு, பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

காவல்துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில் 101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவாசகம் குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அமராவிட்டால், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறீர்கள்; ஒழுங்கீனம் நடக்கிறது என்ற நிலையில் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். (கூச்சல், குழப்பம்)அனைவரும் அமர்ந்துவிட வேண்டும். இது என்னுடைய அன்பான வேண்டுகோள். ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். அனைவரும் அமர்ந்து விடுங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : உரிமையை மறுக்கிறீர்கள் என்று............(கூச்சல், குழப்பம்).